வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 29.08.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ் குடியரசுக்கு தனது 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 137ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில், நாளை காலை 11 மணிக்கு, ஒலிபரப்பாக உள்ளது.
- புதுச்சேரி சட்டப்பேரவையில் மானிய கோரிக்கைகள் மீதான கேள்விகளுக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று பதிலளித்தார்.
- தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

மோடி பயணம்-1 (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ் குடியரசுக்கு தனது 4 நாள் பயணத்தை தொடங்கினார். உஸ்பெகிஸ்தான் மற்றும், கிர்கிஸ் குடியரசுக்கான தனது இந்தப் பயணம் மத்திய ஆசியாவில், இந்தியாவின் கூட்டாண்மைகளை வலுப்படுத்தும் என்றும், அப்பகுதியுடனான நட்பை மேலும் ஆழப்படுத்தும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள புறப்பாடு அறிக்கையில் தெரிவித்துள்ளார். வர்த்தகம் மற்றும் முதலீடு, டிஜிட்டல் இணைப்பு, பாதுகாப்பு மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பது குறித்தும், வளர்ந்த இந்தியா மற்றும் யாங்கி உஸ்பெகிஸ்தான் ஆகிய தொலைநோக்குப் பார்வைகளை முன்னெடுத்து செல்வது குறித்து, உஸ்பெகிஸ்தான் அதிபருடன் கலந்துரையாட தாம் ஆர்வமாக இருப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும், தனது கிர்கிஸ் குடியரசுப் பயணத்தின் போது, அதிபர் திரு. ஜபரோவ் மற்றும் பிற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்களையும் சந்திப்பதாகவும்,

6வது உலக நாடோடிகள் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் கலந்துகொள்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மோடி பயணம்- 2 வாய்ஸ் (19)

(வாய்ஸ்)

4 நாள் பயணமாக உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ் குடியரசுக்கு சென்றுள்ள பிரதமர், இரு நாடுகளையும் பிணைக்கும் நெருங்கிய கலாச்சார மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைந்துள்ள சாஸ்திரி நினைவிடம் மற்றும் தாஷ்கண்ட் மாநில கீழைத்தேய ஆய்வுகள் பல்கலைக்கழகத்தில் உள்ள மகாத்மா காந்தி மையம் ஆகியவற்றையும் தாம் பார்வையிட உள்ளதாக திரு மோடி கூறினார்.

கிர்கிஸ் குடியரசின் அதிபர் திரு. சாதிர் ஜபரோவின் அழைப்பின் பேரில், 26வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிஷ்கெக்கிற்குப் பயணம் மேற்கொள்வதாக பிரதமர் தெரிவித்தார். பாதுகாப்பு, இணைப்பு மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, பிராந்தியத்திற்கான இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லவும், அண்டை நாடுகளிலும் அதற்கு அப்பாலும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்குத் தொடர்ந்து அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகிய தீய சக்திகளிடமிருந்து விடுபட்ட ஒரு பிராந்தியத்தை உருவாக்குவதற்காக சக உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றவும் தாம் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக திரு. மோடி கூறினார்.

ராஜ்நாத் சிங் (20)

இந்தியா ஒரு முக்கியப் பொருளாதாரமாக மட்டுமல்லாமல், தனது நாகரிகப் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் திறன்களில் நம்பிக்கை கொண்ட ஒரு தேசமாகவும் உருவெடுத்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறினார். லக்னோவில் உள்ள பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் 11வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய திரு. சிங், இன்று இந்தியா பேசும்போது, உலகம் செவிசாய்க்கிறது என்றார். புதிய இந்தியாவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாற்றம் என்னவென்றால், நாடு இனி உலகளாவிய விதிகளைப் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், விதிகளை உருவாக்குவதிலும் பங்களிக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சர் கூறினார். மொழி, கலாச்சாரம் மற்றும் நாகரிகத்தின் மீதான தேசியப் பெருமிதம், ஒரு தேசத்தின் தன்னம்பிக்கையையும் முன்னேற்றத்தையும் மேம்படுத்துகிறது என்று பாதுகாப்பு அமைச்சர் கூறினார். இந்தியா ஒரு சிறந்த நிலையில் இருப்பதாகவும், பொருளாதாரம், மனநிலை மற்றும் கலாச்சாரம் என அனைத்து வகையிலும் இந்தியாவை வலிமையாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். கல்வி நிறுவனங்கள், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பேரார்வமும், நீதி, சமத்துவம், சுதந்திரம் மற்றும் சகோதரத்துவம் ஆகிய இலட்சியங்களின் மீது அர்ப்பணிப்பும் கொண்ட இளைஞர்களை வளர்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதுச்சேரி சட்ட மன்றம் - 1 (02)

புதுச்சேரி சட்டப்பேரவையில் மானிய கோரிக்கைகள் மீதான கேள்விகளுக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று பதிலளித்தார்.

புதுச்சேரி சட்ட மன்றம் – 2 வாய்ஸ் (15)

(வாய்ஸ்)

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பது தான் அரசின் எண்ணம் என்று கூறிய அவர், தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார். இந்த ஆண்டு கரசூர்,

மேட்டுபாளையத்தில் தொழிற்பேட்டை கொண்டு வரப்படும் என அவர் உறுதியளித்தார்.

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் பள்ளி முதல் உயர் கல்வி வரையிலான, இலவச கல்வியை மீனவ குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்தார். முதியோர், விதவை, ஊனமுற்றோர் உதவித்தொகைகள் விரைவில் உயர்த்தி வழங்கப்படும் என்றும், புதுச்சேரியில் சிவப்பு அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் எரிவாயு சிலிண்டருக்கான மானியம் 350 ரூபாயாகவும், மஞ்சள் அட்டைதாரர்களுக்கான மானியம் 200 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்றும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி பேரவையில் அறிவித்தார்.

மனதின் குரல் (08)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் 137ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில், நாளை காலை 11 மணிக்கு, ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியை, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், News on air மொபைல் செயலியிலும் ஒலிபரப்பக் கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையைத் தொடர்ந்து அதன் பிராந்திய மொழி வடிவம் இடம்பெறும்.

தேசிய விளையாட்டு தினம் -1 (20)

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மற்றும் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், மேஜர் தியான் சந்திற்கு அஞ்சலி செலுத்தியதோடு, உறுதிப்பாடு, ஒழுக்கம் மற்றும் சிறந்து விளங்கும் மனப்பான்மையே இந்தியாவின் விளையாட்டுக் கலாச்சாரத்தை வரையறுக்கிறது என்றும் கூறினார். இந்திய விளையாட்டு வீரர்கள் உலக அரங்கில் தொடர்ந்து நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதோடு, அடுத்த தலைமுறையினரை உயர்ந்த இலக்குகளை அடையத் தூண்டுகிறார்கள் என்று குடியரசு துணை தலைவர் கூறினார். உடற்தகுதியை மேம்படுத்தவும், விளையாட்டுகளில் அதிக பங்கேற்பை ஊக்குவிக்கவும், இளம் இந்தியர்களை அர்ப்பணிப்புடனும் விடாமுயற்சியுடனும் சிறந்து விளங்கத் தூண்டவும் புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் துணை குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார்.

<u>தேசிய விளையாட்டு தினம் -2 (14)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மேஜர் தியான் சந்திற்கு அஞ்சலி செலுத்தினார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், மேஜர் தியான் சந்தின் திறமை தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புது தில்லியில் மேஜர் தியான் சந்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் மாண்டவியா, மேஜர் தியான் சந்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய விளையாட்டு தினம் கொண்டாடப்படுவதாகக் கூறினார்.

ஃபிட் இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், நாடு முழுவதும் 'விளையாட்டு மைதானத்தில் ஒரு மணி நேரம்' என்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிர்மலா சீதாராமன் (06)

ஜி-20 நிதியமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று அமெரிக்கா சென்றடைந்தார். சிகாகோ விமான நிலையத்தில், அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தியா-அமெரிக்கா இடையேயான, நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக, அந்நாட்டு தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நேபாளம் (11)

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கினால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்து, பரவலான அழிவை ஏற்படுத்திய பேரிழப்பை தொடர்ந்து, இந்திய அரசு வழங்கிய ஆதரவிற்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக நேபாள அதிபர் திரு. ராமச்சந்திர பௌடல், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவிற்கு நன்றி தெரிவித்தார். கடந்த புதன்கிழமை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து நிகழ்ந்த துயரமான உயிரிழப்புகளுக்கு திரு. பௌடல் தனது இரங்கலை தெரிவித்தார். இந்த வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து, 149 இந்தியர்கள் சீனாவிலிருந்து நேபாளத்திற்குப் பாதுகாப்பாகத் திரும்பியதாகவும், மேலும் 320 பேர் தொடர்புகொள்ள முடியாத நிலையில் உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

வானிலை (05)

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், இன்று முதல், அடுத்த 4 தினங்களுக்கு, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு (06)

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச பாரா சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா, 2 வெள்ளி, 1 வெண்கலம் வென்றது. ஆடவர் பிரிவில், Anshuman Dhumal மற்றும் மகளிர் பிரிவில், Viswa Vasini வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

செக் குடியரசில் நடைபெற்று வரும், சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா, 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

வேளாங்கண்ணி (09)

நாகை மாவட்டம், வேளாங்கண்ணி பேராலயத்தில் இன்று மாலை கொடியேற்றம் நடைபெற்றதை காண, லட்சக்கணக்கான மக்கள் அங்கு குவிந்துள்ளனர். வேளாங்கண்ணியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தின் திருவிழா இன்று தொடங்கி, வரும் செப்டம்பர் 8ஆம் தேதி அன்னையில் பிறந்த நாள் விழாவுடன் நிறைவு பெறும். இந்நாட்களில், இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் வருகை தருகின்றனர். இவ்விழாவின்போது அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில், வேளாங்கண்ணி கடலில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி விளையாட்டு (03)

தேசிய அளவிலான கால்பந்து போட்டி சத்தீஷ்கர் மாநிலத்தில் வரும் 31ஆம் தேதி முதல், அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்போட்டியில், புதுச்சேரி மாநில ஜூனியர் ஆடவர் கால்பந்து வீரர்கள் பங்கேற்கின்றனர்.